





# பச்சை மனிதன்

யோகநாதன் ஒரு பச்சைத் தமிழர். மரங்கள் நடுவதை வாழ்வில் ஏறக்குறைய முழு நேரப் பணியாகக் கொண்டிருப்பவரை வேறு எப்படிச் சொல்வது? இந்த கோயம்புத்தூர்க்காரர் கடந்த 25 வருடங்களில் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கன்றுகளை நட்டு, பசுமையும் நிழலுமான நெடுமரங்களாக்கியிருக்கிறார்.

> “மரங்களுக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கும் பச்சைத் தமிழர்”

யோகநாதன் ஒரு சாதாரண பஸ் கண்டக்டர்தான். மரக்கன்று வாங்குவதற்கு தொடக்கத்தில் இவரது சம்பளம்தான் ஒரே முதலீடு. இன்று யோகநாதனின் பேரைச் சொன்னால் மரக்கன்று தருவதற்கு பல அமைப்புகள் தயாராக இருக்கின்றன. ''மரங்களுக்கும் எனக்கும் பெருசா ஒண்ணும் சம்பந்தம் கிடையாது. எனக்கு பதினாறு வயசு இருக்குறப்போ, நீலகிரி எஸ்டேட்டில் இருக்குற எங்க உறவினர் வீட்டுக்கு ஒருமுறை போயிருந்தேன். எரிக்குறதுக்காகவோ, கடத்துறதுக்காகவோ மரங்களை வெட்டுறது அங்கே தினசரி நடக்குற விஷயம். வேரோடு வெட்டிச்சாய்ச்சு, லாரியில அறுத்துப் போட்டுட்டு போயிட்டே இருப்பாங்க. ஒவ்வொரு மரமும் நிலம் அதிர விழும்போது, எனக்கு வயித்தெரிச்சலா இருக்கும். அப்போதான் ஆரம்பிச்சுது, நம்மால் முடிஞ்சவரைக்கும் மரம் நடணும்ங்கிற வெறி!'' - ஒரு சாதாரண விதை, சாதனை விருட்சமான கதை இதுதான்.

'மரம் நடுறது எப்படினு ஆரம்பத்துல எனக்கு எதுவும் தெரியாது. கேனத்தனமா ரோட்டோரத்துல ஏதாவது மரக்கன்றை நட்டுட்டு, வீட்டுக்கு வந்துருவேன். மறுநாள் போய்ப் பார்த்தா, அங்கே மரம் நட்டதுக்கான சின்ன தடயம்கூட இருக்காது. பாதுகாப்பு இல்லாத இடத்துல மரம் நடக்கூடாதுங்கிற அடிப்படை விஷயம் அப்புறம்தான் புரிஞ்சது! ஸ்கூல், காலேஜ், ஆஸ்பத்திரி போன்ற இடங்களுக்குப் போய், அனுமதி கேட்டு, மரம் நட ஆரம்பிச்சேன்'' என்று சொல்லும் யோகநாதன், மரம் நடுவதை வலியுறுத்தி நடத்தும் ஸ்லைடு ஷோக்கள் கோயம்புத்தூர் பகுதி மாணவர்களிடையே மிகவும் பிரபலம். அரசு அனுமதியின்றி மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் யோகநாதனின் போராட்டங்களால் கடுப்படைந்த சமூக விரோதிகள் அவரது வீட்டை பலமுறை தாக்கியிருக்கிறார்கள்.

மரங்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் யோகநாதனுக்கு இரு மகள்கள். "என்னுடைய திருமணம் காதல் திருமணம். மரங்கள் மேல் எனக்கு இருக்குற ஈடுபாட்டைப் புரிஞ்சுகிட்டுதான், என் மனைவி என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டாள். பஸ் டிப்போவிலும் இப்போ என் பணிகளைப் புரிஞ்சுகிட்டு, பாராட்டுறாங்க" என்று நிறைவுடன் சொல்கிறார் யோகநாதன்.

-ஆனந்த் செல்லையா.

